# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 210/2024
# வழக்கு சாட்சி PW–7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகையா | தொழில் | : | ஏதுமில்லை |
| கிராமம் | : | கருத்தனூர் | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 14th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருத்தனூரில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. எதிரிகளை எனக்கு தெரியும். 2023ம் ஆண்டு ஒரு நாள் தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் நான் அன்பரசனின் சகோதரி கவிக்குயிலிடம் எனக்கு பழக்கம் இருந்ததினால் விரோதம் கொண்டு நான் கலங்கலில் உள்ள கோழிப்பண்ணையில் கோழி வாங்க சென்றபோது, எதிரிகள் 4 பேரும் என்னை பிடித்து நடத்தி கொண்டு போய் கலங்கலில் உள்ள அவர்களுடைய வீட்டில் கொண்டு போய், அன்பரசன் ஒரு மரத்தில் என்னை கட்டி வைத்தார்.

அன்பரசனும், கனகராஜனும், நடராஜனும் 3 பேரும் ஆளுக்கொரு அரிவாள் எடுத்து வந்தார்கள். என்னுடைய அம்மா, என்னுடைய மகனை "வெட்டாதீர்கள்" என்று அழுதார். அன்பரசன் அரிவாள் வைத்து "என்னுடைய தங்கச்சியிடம் எவ்வாறு நீ பேசலாம்" என்று கூறி கெட்ட வார்த்தைகளால் ஏசி, "உன்னை வெட்டாமல் விடமாட்டேன்" என்று கூறி என்னுடைய கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். அந்த வெட்டை நான்

என்னுடைய இடது கையால் தடுத்தேன். அப்போது, அந்த வெட்டு என்னுடைய இடது கையில் பட்டு கை துண்டானது. முதலில் ஒரு வெட்டு கையில் பட்டு இடது கை 3 விரல்கள் துண்டானது. அடுத்த வெட்டு என்னுடைய இடது கை மணிக்கட்டில் பட்டு மணிக்கட்டிலிருந்து கை துண்டானது. இடது கையில் இரண்டு வெட்டுக்களும் அன்பரசன் தான் வெட்டினார். (சாட்சி தன்னுடைய இடது கையை காண்பித்தார். இடது மணிக்கட்டிலிருந்து அவருடைய கை துண்டாக்கப்பட்டிருந்தது).

கனகராஜ் அரிவாள் வைத்து இடது கண் அருகே என்னை வெட்டினார் (சாட்சி இடது கண்ணில் ஏற்பட்ட காயத்தழும்பை காண்பித்தார்). அன்பரசன் பாட்டிலால் என்னுடைய தலையில் அடித்தார். நடராஜன் அரிவாளால் என்னுடைய வலது தோள்பட்டையில் வெட்டினார். என்னை மரத்தில் கட்டி வைத்து தான் எதிரிகள் வெட்டினார்கள்.

என்னுடைய அம்மா, "என்னுடைய மகனை வெட்டாதீர்கள்" என்று அழுதபோது, முத்துமாரி என்னுடைய அம்மாவை கம்பி வைத்து அடித்தார். என்னுடைய அம்மாவிற்கு வெளிக்காயம் ஏற்படவில்லை. என்னை எதிரிகள் பிடித்து கொண்டு சென்றபோது, என்னுடைய அம்மாவிற்கு போனில் தகவல் சொன்னேன். என்னுடைய அம்மா மணிகண்டன், கார்த்திக் ஆகியோர்களுடன் வந்தார்கள். என்னுடைய அம்மாவுடன் ஸ்ரீதர் என்பவரும் வந்தார். என்னை எதிரிகள் வெட்டுவதை பார்த்து கவிக்குயில் அங்குள்ள கிணற்றில் குதித்து விட்டார். மணிகண்டன் மற்றும் கார்த்திக் என்னை கட்டியிருந்ததை அவிழ்த்து விட்டார்கள்.

பின்னர், எனக்கு மயக்கம் ஏற்பட்டது. ஆம்புலன்சை வரவழைத்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு என்னுடைய துண்டான கையை ஒட்ட வைக்க வேண்டும் என்றால் திருநெல்வேலி அல்லது மதுரை கொண்டு செல்ல வேண்டும் என கூறினார்கள். திருநெல்வேலி காவேரி மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு என்னுடைய இடது கை துண்டானதை ஒட்ட வைக்க முடியவில்லை.

என்னுடைய இடது கண்ணில் ஏற்பட்ட காயத்திற்காக அகர்வால் மருத்துவமனைக்கு காவேரி மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றார்கள். என்னுடைய இடது கண் பார்வை போனது. இந்த வழக்கு சம்பவம் குறித்து ஸ்ரீதர் புகார் அளித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் என்னை தாக்க பயன்படுத்திய அரிவாள் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் சாரம் என்னுடையது இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கயிறு வைத்து தான் என்னை கட்டினார்கள் அந்த கயிறு **சா.பொ.1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மலையன்குளத்திலிருந்து கீழக்கலங்கல் வருவதற்கு 15 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கீழக்கலங்கலுக்கு சம்பவநாள் வினோ என்பவருடன் வந்தேன் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் வந்தேன் என்று வாகன எண். போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் கீழக்கலங்கலுக்கு இவ்வளவு தூரம் தாண்டி எதற்காக வந்தேன் என்றால்

கவிக்குயிலிடம் பேசுவதற்காக வந்தேன். எந்த இடத்தில் வைத்து எதிரிகள் என்னை பிடித்தார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் மருத்துவமனைக்கு செல்லும்போது, பேசும் நிலையில் இருந்தேன் என்றால் சரியல்ல. முத்துராஜ் என்பவர் யாரென்று எனக்கு தெரியாது. முத்துராஜ் கோழிப்பண்ணை கவிக்குயிலின் வீட்டிற்கு அருகில் உள்ளது. நான் கார்த்திக், மணிகண்டன் ஆகியோர்களுக்கு போன் மூலம் "நான் மாட்டிக்கொண்டேன், வாருங்கள்" என்று சொன்னேன். என்னுடன் வந்த வினோ என்னை எதிரிகள் பிடித்தவுடன் "அம்மாவை கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சென்று விட்டார். என்னுடைய துணிகளிலும், கயிற்றிலும், மரத்திலும் இரத்தம் பட்டது என்றால் சரிதான்.

ஆடைகள் எதுவும் ஆய்வாளர் விசாரணையின்போது, நான் கொடுத்தேனா? என்றால் அந்த ஆடைகளை மருத்துவமனையில் கிழித்து எடுத்தார்கள். மலையன்குளத்திலிருந்து கீழக்கலங்கலுக்கு வரும்போது, இடையில் காவல்நிலையங்கள் உள்ளது என்றால் ரோட்டில் இல்லை. ஏற்கனவே இந்த வழக்கிற்கு பின் என் மீது குண்டாஸ் வழக்கு போடப்பட்டு நான் சிறையில் இருந்தேன் என்றால் சரிதான். ஏற்கனவே, காவல்நிலையத்தில் என் மீது சரித்திர குற்ற பதிவு உள்ளது என்றால், இந்த வழக்கிற்கு பின், இந்த வழக்கிலுள்ள 2, 3 எதிரிகளை நான் கொலை செய்ததாக வழக்கு பதிவு செய்த பின் தான் சரித்திர குற்ற பதிவு உள்ளது. இந்த வழக்கிற்கு முன்பே என் மீது வேறு வழக்குகள் இருந்தது என்றாலும், நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் ஆய்வாளர் விசாரணையின்போது, எதிரிகள் வைத்திருந்ததாக கூறப்பட்ட அரிவாள்கள் என்ன வகையானது மற்றும் அதன் அளவுகள் குறித்து நான் கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. கம்பியின் அளவு நான் கூறவில்லை. கவிக்குயிலின் கணவர் தான் 2ம் எதிரி கனகராஜ். கவிக்குயிலுக்கு ஏற்கனவே குழந்தை உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தை சுற்றி 3 வீடுகள் உள்ளது. பல ஆட்களும் பார்க்கக்கூடிய திறந்த வெளி பகுதி என்றால் சரிதான். என்னை கொண்டு சென்ற ஆம்புலன்ஸ் விபரத்தை பற்றி நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் மருத்துவ ஆவணங்களை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் கேட்கவில்லை. நான் அகர்வால் கண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் அவர்கள் அதனை குறித்து கேட்கவில்லை. பீர்பாட்டில் வைத்து என்னை அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் டிரைவராக வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். நான் கவிக்குயிலை பார்த்து விட்டு செல்லும்போது, பதற்றத்தில் வாகனத்தை விரைவாக ஓட்டி கொண்டு செல்லும்போது ஏற்பட்ட விபத்தில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களை பயன்படுத்தி, எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னுடைய அம்மாவும், நண்பர்களும் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று வாகனத்தை குறித்தான விபரம் நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும்

சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே, என் மீது பல வழக்குகள் இருந்த நிலையில் வேறு நபர்களால் நான் தாக்கப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.15 18:52:42 +0530